தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆவணி 18, திருவள்ளுவர் ஆண்டு—2052

2021 செப்டம்பர் 3, வெள்ளிக்கிழமை

சென்னை–600 002, வாலாஜா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், கலைவாணர் அரங்கம், மூன்றாவது தளத்தில் உள்ள பல்வகை கூட்டரங்கத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடைய தரண்."

ஆழமும் அகலமும் கொண்ட அகழ், பரந்த நிலம், உயர்ந்து நிற்கும் மலைத்தொடர், அடர்ந்திருக்கும் காடு ஆகியவற்றை உடையதே அரணாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

16—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***353—திரு. தி. வேல்முருகன்:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி, 11-வது வார்டு, பக்கிரிப்பாளையம் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) பண்ருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 11, பக்கிரிப்பாளையம் என்ற பகுதியில் 55 குடியிருப்புகளில் சுமார் 234 எண்ணிக்கையில் பொதுமக்கள் வசித்து வருகின்றார்கள். அங்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கத் தேவையான நகராட்சிக்குச் சொந்தமான இடம் இல்லை. எனவே, வருவாய்த் துறைக்குச் சொந்தமான சர்க்கார் புறம்போக்கு நிலத்தினை கையகப்படுத்தி, நில உரிமை மாற்றம் செய்து, புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதிக்குள் கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பண்ருட்டி சட்டமன்றத் தொகுதியில் சுமார் 60,000-க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றார்கள். 40 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்மூலம், வீதிகளில் பைப் லைன் அமைத்து, குடிநீர் விநியோகம் செய்யப்பட்ட முறையும் நடைமுறையில் இருந்து வருகிறது. இதை மாற்றியமைத்து, புதியதாக 6 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைக் கட்டி, அங்குள்ள பைப் லைன்களையும் புதியதாக மாற்றியமைத்து, சீரான குடிநீர் வழங்குவதற்கு 4.80 இலட்சம் ரூபாய் மதிப்பிலும், பழைய பைப் லைன்களை மாற்றுவதற்கு 76 இலட்சம் மதிப்பிலும் திட்ட அறிக்கை தயார் செய்து, நகராட்சி நிருவாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பக்கிரி பாளையத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி நடப்பு ஆண்டிலே

2021 செப்டம்பர் 3]

அமைத்துத் தரப்படும் என்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்படி இரண்டு திட்டங்களையும் கவனத்தில் கொண்டு, நடப்பு ஆண்டிலேயே பண்ருட்டி நகரத்திலுள்ள வீடுகள்தோறும் சீரான குடிநீர் கிடைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, அப்படியொரு முன்மொழிவு பண்ருட்டி நகராட்சியிலிருந்து வந்திருக்குமேயானால், அதைப் பரிசீலித்து உடனடியாக அந்தப் பணிகள் செய்வதற்கு ஆவன செய்யப்படும்.*

இரண்டாவதாக, 121 நகராட்சிகளில், பல்வேறு இடங்களில் 30, 40 ஆண்டுகளுக்கு முன்னால் போடப்பட்ட பைப் லைன்கள், கொடுக்கப்பட்ட குடிநீர் இணைப்புகள் ஆகியவையெல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றையும் கணக்கெடுத்துக் கொண்டிருக்கிறோம். பைப் லைன் உடைந்ததன் காரணமாக எங்கெங்கு குடிநீர் சீராக வரவில்லை என்பதைக் கணக்கெடுத்து, அதையும் மாற்றியமைத்து, குடிமக்களுக்கு நேரடியாகக் குடிநீர் வழங்கும் பணியை இந்தத் துறை நிச்சயமாக மேற்கொள்ளும்.

தற்போது மத்திய அரசு ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறது. ஆனால், அந்தத் திட்டத்தை இன்னும் நடைமுறைப்படுத்தவில்லை. இல்லங்கள் தோறும் குடிநீர் இணைப்பு தருவதற்காக 'ஜல் ஜீவன்' என்ற திட்டம் மத்திய அரசால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அத்திட்டத்தை இன்னும் நடைமுறைக்குக் கொண்டுவரவில்லை. இத்திட்டம் நடைமுறைக்கு வரும்போது, எங்கெங்கெல்லாம் பைப் லைன்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனவோ அவற்றையெல்லாம் சரி செய்து, ஒவ்வொரு இல்லத்திற்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர், எந்தளவு விநியோகிக்க முடியுமோ அந்தளவு கொடுப்பதற்கு எங்கள் துறை நிச்சயமாக நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், உங்களுக்கு கேள்வியைச் சுருக்கமாக கேட்கத் தெரியும், அப்படியே கேளுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பண்ருட்டி நகராட்சியின் ஒட்டுமொத்தக் கழிவுகளையும் தாங்கிச் செல்கின்ற அளவிற்கு வாலாஜா வாய்க்கால் என்கிற ஒரு வாய்க்கால் இருக்கிறது. இந்த வாய்க்காலில்தான் 60,000 மக்களால் வெளியேற்றப்படும் ஒட்டுமொத்த கழிவுகளும் செல்கின்றன. அந்த வாய்க்காலில் பிளாஸ்டிக் பைப்கள், பல்வேறு பாட்டில்கள் போன்றவற்றால் அடைப்பு ஏற்பட்டு, அம்பேத்கர் நகர், L.N. புரம், மணி நகர் ஆகிய பகுதிகளில் வாழ்கின்ற நகரவாசி மக்களுக்குக் கொசுத் தொல்லைகளால் டெங்கு, மலேரியா போன்ற நோய்கள் ஏற்பட்டு மிகப் பெரிய பாதிப்பிற்குள்ளாகிறார்கள். ஆகவே, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள், வாலாஜா வாய்க்காலைத் தூர்வாரி, இருபக்கங்களிலும் காம்பவுண்ட் சுவர்களை அமைத்து, தண்ணீர் வழிந்தோடி ஆறுகளில் சேருவதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் வகையில் விரிவான திட்ட அறிக்கையைத் தயார் செய்து, எங்கள் பண்ருட்டி நகராட்சிக்கு ஒரு நிரந்தர தீர்வை ஏற்படுத்தித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன், நன்றி.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை பண்ருட்டி நகரத்திற்கு மட்டுமல்ல, நிறைய நகரங்களில் இப்படி கழிவு நீர் கலந்து அங்குள்ள வாய்க்கால்களில் ஓடுகிறது. அதற்காக சென்னையில் இப்போது ஒரு புதிய திட்டத்தை குடிநீர் வழங்கல் துறை எடுத்திருக்கிறது. சைதாப்பேட்டையில் இருக்கிற அந்தக் கழிவுநீர் ஓடையின் இரு பக்கங்களும் compound wall கட்டி, அதற்கு இரண்டு பக்கங்களும் கழிவு நீர் pipes அமைத்து, சாக்கடை கழிவு நீரினை அந்த pipes வழியாக விட்டு, சாக்கடை நீர் வாய்க்காலிலே கலக்காமல், நேரடியாக underground drainage–ஆக எடுத்து,

2021 செப்டம்பர் 3]

சுத்திகரிக்கப்படுகின்ற இடத்திற்குக் கொண்டு செல்லப்படுகின்ற பணி இப்போது சென்னையிலே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதேபோலத்தான் எல்லா பகுதிகளிலும் செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. அதற்காக விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தத் திட்டத்திற்கு நிறைய நிதி தேவைப்படும். படிப்படியாக நிதிநிலைமைக்கேற்ப நிச்சயமாக செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சரிடம் ஒரு கோரிக்கை. பொள்ளாச்சி நகரத்தில் ஏற்கெனவே நீண்ட காலத்திற்கு முன்பு செயல்படுத்தப்பட்ட 3 குடிநீர்த் திட்டங்கள் செயல்பாட்டிலே உள்ளன. புதிதாக நகரத்தோடு இணைந்த பகுதிகளுக்கு (*added areas*) குடிநீர் விநியோகம் போதுமானதாக இல்லை. நகரத்தினுடைய பல பகுதிகளுக்குத் தண்ணீர் 4 நாட்களுக்கு ஒரு முறை வந்துகொண்டிருக்கிறது. சென்ற ஆட்சியிலேயே, புதிய குடிநீர்த் திட்டத்திற்கான* technical sanction *வழங்கப்பட்டுவிட்டது. அதற்கான நிதியை ஒதுக்கி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டே இத்திட்டத்தைத் தொடங்கிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்துரு குறித்து அதிகாரிகள்மூலம் விசாரித்து, அது எந்த நிலையில் இருக்கிறதென்பதைக் கேட்டறிந்து, உடனடியாக மக்களுக்குக் குடிதண்ணீர் கொடுக்கிற அந்தப் பணியைச் செய்வதற்கு இந்த அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே அங்கிருக்கிற கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்டு, பொள்ளாச்சியிலிருந்து மேற்குப் புறமாக போய்க்கொண்டிருந்த அந்த நீரை, இப்போது* pipe line *போட்டு கிழக்குப் பக்கமாக திருப்ப ஓர் அரசாணை கூட வெளியிடப்பட்டிருக்கிறது. அதைப்பற்றிக்கூட அங்கிருக்கக்கூடிய விவசாயிகள் எல்லோரும் நேரடியாக மனு*

TRUTH ALONE TRIUMPHS

தந்திருக்கிறார்கள். அதையும் ஆராய்ந்து, இயற்கையாக அது எங்கு செல்லுமோ, அங்கு செல்வதுபோல் செய்து தருவோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன் அவர்கள்.

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி நகரத்தில் மதிகோண்பாளையம், மேட்டுக்கொட்டாமேடு பகுதிகளில் 4 நாட்களுக்கு ஒரு முறைதான் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் தண்ணீர் கொடுக்கிறார்கள். இது மாண்புமிகு அமைச்சருக்குத் தெரியும். அதனால், மதிகோண்பாளையம், மேட்டுக்கொட்டாமேடு பகுதிகளுக்கு லாரிமூலம் தினந்தோறும் தண்ணீர் கொண்டுபோய் கொடுக்கிறார்கள். அங்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து, அந்த மக்களுக்குக் குடிநீர் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: எந்த நகரத்தைச் சொன்னீர்கள். (குறுக்கீடு) தருமபுரி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சிறப்புத் திட்டமான ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்பது 1,928.80 கோடி ரூபாய்க்கும் மேலாக செலவு செய்து, கிட்டத்தட்ட 10 ஆண்டுகளுக்கு முன்பாக செயல்படுத்தப்பட்டது. இடையிலே 10 ஆண்டுகள் அதைக் கவனிக்காமல் விட்டுவிட்ட காரணத்தால், நிறைய இடங்களுக்கு தண்ணீர் போதவில்லை, தண்ணீர் சென்றடையவும் இல்லை. அதனால் முதலமைச்சர் அவர்கள், எங்களையும், எங்கள் துறை அதிகாரிகளையும் அங்கு சென்று பார்க்கச்சொல்லி, அங்கு என்ன இருக்கிறது என்று போய்ப் பார்த்தபோது, 132 இடங்களிலே illegal connection, அதாவது நேரடியாகத் தண்ணீர் எடுத்துக்கொண்டுவிட்ட காரணத்தால் இறுதிவரை அங்கு தண்ணீர் செல்ல முடியவில்லை என்பது ஒன்று.

இரண்டாவது, 2031 ஆம் ஆண்டுதான் அங்கு 131 எம்.எல்.டி. தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால், இப்போதே 140 எம்.எல்.டி. அளவுக்குத் தண்ணீர் கொடுத்தால்தான் இறுதிவரை தண்ணீர்

2021 செப்டம்பர் 3]

போகும் என்ற நிலைமை வந்திருக்கிறது. அதற்கான காரணத்தை உங்கள் ஊரிலேயே நான் சொல்லியிருக்கிறேன். அது உங்களுக்கும் தெரியும் என்று நான் நினைக்கிறேன். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சிறப்புத் திட்டத்தின்கீழ் இன்றைக்கு ஒரு சர்வே எடுக்கப்பட்டிருக்கிறது, எங்கெங்கெல்லாம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் தேவைப்படுமோ, அங்கெல்லாம் அமைத்து, pipe line புதிதாக மாற்றப்பட்டு வெகு விரைவிலே அனைத்துப் பகுதிகளுக்கும் சீரான குடிநீர் விநியோகம் செய்யப்படும். அங்கே இருக்கிற ஊராட்சி மன்றத் தலைவர்கள் இந்தத் தண்ணீர் போதாத நேரத்தில், புதிதாக அவர்களே ஓர் ஆழ்துளைக் கிணற்றைப் போட்டு, இதே tank-ல் ஏற்றி, தண்ணீர் எடுக்கிற காரணத்தால், fluoride அதிகமாகி பல் வீணாகப் போகிற பிரச்சினையெல்லாம் இருக்கிறது. அதனால், அப்படி தண்ணீரை ஏற்றக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, விரைவிலே சீரான குடிநீர் விநியோகம் நடக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை சபாநாயகர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மேல்நிலைக் குடிநீர்த் தொட்டிகளெல்லாம் முன்பு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் தரமான முறையிலே கட்டப்பட்டன. அப்போது தரமானதாகக் கட்ட வேண்டும் என Contractors-இடம் condition போடப்பட்டு, மீறுபவர்களுக்கு சிறைத்தண்டனைகூட வழங்கப்படக்கூடிய வகையிலே, conditions-ன் தன்மை இருந்தது. அந்தவகையில் தரமான முறையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் எல்லாம் கட்டப்பட்டன.

முற்பகல் 10–10

ஆனால், கடந்த 10 ஆண்டுக் காலமாக, குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் கட்டப்படாமல், ஒன்றியங்களின்மூலம் கட்டப்படக்கூடியவற்றிற்கு எந்தவித conditions-ம் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, அந்தக் குடிநீர்த்தேக்கத் தொட்டிகள் நல்ல முறையில் கட்டப்படுமா என்று மக்களிடம் ஐயம் இருக்கிறது. ஆகவே, நாங்கள் தொகுதிக்குச் செல்லும்போது பல்வேறு கிராமங்களிலே 30 ஆண்டுகள் கடந்த அந்தக் குடிநீர்த் தேக்கத்

தொட்டிகளையெல்லாம் மீண்டும் கட்ட வேண்டுமென்று மக்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்டவற்றைக் கணக்கெடுத்து, நம்முடைய குடிநீர் வடிகால் வாரியம்மூலம் அவற்றை நல்லமுறையிலே, சிறப்பான முறையிலே கட்டித் தர அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் எந்தத் திட்டம் புதியதாகத் தொடங்கப்பட்டாலும், ஏற்கெனவே இருக்கின்ற திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வந்தாலும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் எங்கள் துறையின் சார்பாகத்தான் கட்டப்படும். Own sourceமூலம் என்று சொல்லப்படுகின்ற, RD Department மூலமாக, நகராட்சி அல்லது ஒன்றியம் மூலமாக நடைபெறுகின்ற பணிகளில் அவர்கள்தான் அந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் கட்டப்படும் குடிநீர்த் தொட்டிகள் சிறப்பானதாகவும், நல்லமுறையிலும் இருக்கும். ஏற்கெனவே, எங்கள் துறையின் சார்பாகக் கட்டப்பட்ட தொட்டிகள் சரியாக இல்லாமல் இருக்குமானால், அதைப் புதுப்பித்துத் தருவதற்கும் துறை முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. ராஜூ, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

17—

கலைக் கல்லூரி

***3707—திரு. கே. ராஜூ:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரையில் இருபாலர் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?